மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.





இந்தியாவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk




# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்


இதழ் 36


- கர்த்தருக்கு முன்பாக விரித்து வை
- சுய விருப்பமும் முன்குறித்தலும்
- தேவன் புறஜாதிகளைக் கட்டுப்படுத்துகிறார்
- மாற்று வழியில் கருதுதல் (தியானம்)
- எரேமியாவிடமிருந்து இன்று
- நாம் பெறும் அறிவுரைகள்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் “கிறிஸ்துவில் சகோதரர்” என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் ‘வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற’ மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

| | |
|---|---|
| லினஸ் டேனியேல் | : தலைமை ஒருங்கிணைப்பாளர் |
| ராஜபட்சம் ஆனந்தா | : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர் |
| பவித்ரா | : நிர்வாகம், உபப்பதிப்பாளர் |

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*“இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” (2. கொரிந்தியர் 5:17).*



# கர்த்தருக்கு முன்பாக விரித்து வை

## எசேக்கியா தேவனுடைய உதவியைக் கொண்டு ஒரு பிரச்சனையைத் தீர்க்கிறான்.



வேதவாக்கியங்கள் எல்லாவற் றிலும் நாம் கற்றுக்கொள்ளக் கூடிய பாடங்கள் இருப்பது நம் பாக்கியமே! ராஜாக்களின் புத்த கங்கள் அதற்கு விலக்கல்ல. நாம் பின்பற்றுவதற்கேற்ற நல்ல முன் மாதிரிகள் ஏராளம் உள்ளன. தவிர்க்கக்கூடிய காரியங்களும் கூறப்பட்டுள்ளன. நாம் பின்பற்ற கூடிய நல்ல முன்மாதிரியாக எசேக்கியாவின் வாழ்க்கை அமைந்துள்ளது. எசேக்கியாவின் வாழ்க்கையில் என்னை அதிக மாக தொட்ட பகுதி அவனை யும், அவன் ஜனங்களையும் பயமுறுத்த ரப்சாக்கே எழுதிய கடிதம். கவலையூட்டும் இந்தக் கடிதத்தைக் கண்ட எசேக்கியா செய்தது என்ன? ‘‘அதைக் கர்த்தருக்கு முன்பாக பரப்பி வைத்தான்’’. எத்தனை அற்புத மான வாக்கியம்! முழு விசுவாசத்தோடும் தன்னை முற்றிலும் கர்த்தருக்குக் கீழ்ப்படுத்தினவனாக தன் முழு இருதயத்தையும், ஆத்து மாவையும் ஊற்றிவிட்டான். அவனே பிரச்சனையைத் தீர்த்துக்கொள்ள லாமென முயலவில்லை. மற்ற மனிதர்களைக் கொண்டு அதைத் தீர்த்துக்கொள்ளவும் முயலவில்லை. தேவனின் பதில் என்னவாயிருந்தது? ‘‘எல்லா பக்கங்களிலும் தேவன் அவனை வழிகாட்டி நடத்தினார்’’ (2.நாளாகமம் 32). தன்னைக் காக்கும்படி தேவனுக்காக வெறுமனே காத்திருக்கவில்லை. தேவன் அவர்களோடிருந்து அவர்களை வழி நடத்துவார் என்ற திடநம்பிக்கை இருப்பதைக் காட்டும்படி செயலாற் றினான். நகரத்திற்கு வரும் நீர் ஆதாரத்தை அசீரியர்கள் அனுபவிக்காதபடி அதைத் துண்டித்தான். நகரத்தையும், ஆயுத சாலையையும் பலப்படுத்தினான். இறுதியில், மக்கள் தேவன் பேரில் விசுவாசம் வைக்கும்படியாக அவர்களை உற்சாகமூட்டினான்.

நம் வாழ்க்கைப் போராட்டங்கள், எசேக்கியாவின் வாழ்க்கையில் இருந்ததுபோல, வாழ்வா, சாவா எனும் பிரச்சனைகளல்ல. இருப்பினும் நம் வாழ்க்கையைப் பெருமளவில் பாதிக்கக்கூடிய விளைவுகளைத் தரும் போராட்டங்களை நாமும் சந்திக்க வேண்டியுள்ளது.

நாம் ஒரு பிரச்சனையைச் சந்திக்கும்போது, நம் பிரச்சினையை முற்றிலு மாகவும், முழுமனதோடும் தேவனிடம் விட்டுவிடுகிறோமா? அல்லது இரவு தூங்கப் போகும் முன் ஒரு சிறிய ஜெபத்தில் சொல்லிவிட்டு, அப்படியே விட்டுவிடுகிறோமா? ஒரு சோதனை (உபத்திரவம்) வரும் போது, நாம் செய்யும் முதல் செயல் யாது? நாமே சரிசெய்ய முயல எண்ணுகிறோமா? வேகமாக பிறரிடம் ஆலோசனைக் கேட்க பிரயாசப் படுகிறோமா? நாம் முதலாவதாக, தேவனிடம் போகவேண்டாமா?

எசேக்கியா முதலில் தேவனிடத்தில் ஆலோசனைக் கேட்டு, அதன்பின் பிரச்சனையைத் தீர்ப்பதற்குத் தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்தான். நீதியான வழியில் காரியங்களை நடப்பித்தால், தேவன் அவனோடிருப்பார் என்று அவனுக்குத் தெரியும்.
"நமக்குத் துணை நின்று, நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக் கிறவர் நமது தேவனாகிய கர்த்தர் தானே".

# சுய விருப்பமும் முன்குறித்தலும்

நாமெல்லாருமே பாவத்தினால் சாவுக்கேதுவானவர்கள் என்றும், ஆனால் இயேசு கிறிஸ்து மூலமாய் நித்திய ஜீவனைப் பெறுவதற்கு தேவன் ஒரு வழியை வகுத்திருக்கிறார் என்றும் வேதம் கூறுகிறது. இந்த வழியைப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் எல்லா ருக்குமே இது திறந்திருக்கி றதா அல்லது சிலமக்கள் மட்டுமே அந்த வழியைப் பின் பற்றட்டும் என அந்த சிலரை தேவன் தேர்ந்தெடுத்துள்ளாரா? முதலில் குறிப்பிட்டது சுயவிருப்பம். அடுத்தது முன் குறித்தல் வேதாகமம் இவற்றில் எதை போதிக்கிறது? நமக்கு சுய விருப்பம் இருக்கிறது எனும் கருத்தை ஆதரிப்பதற்குப் பல ஆதாரங்கள் வேதாகமத்தில் உள்ளன. முன்குறித்தல் எனும் வார்த்தை வேதாகமத்தில் இடம் பெற்றிருந்தாலும், யார் நித்தியஜீவனைப் பெறுவார்கள் என்பதைத் தேவன் தீர்மானித்து விட்டார் என அர்த்தம் கொள்வது சரியாகப் புரிந்துக் கொள் ளாமையினால் தான்



## மனிதனின் சுயவிருப்பம், தேவனின் முன்னறிவும்

மனிதனின் சுயவிருப்பத்தைக் காட்டும், தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதி கள் கீழே தரப்பட்டுள்ளன:

> *"நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் ..ஆகையால் நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு ஜீவனைத் தெரிந்துக்கொள்,"* என மோசே கூறினார்.

> *"விசுவாசத்தினாலே ...தான் பார்வோனுடைய குமாரன் என்னப்படு வதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப் பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டான்"* (எபிரெயர் 11:24,25)

> *"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்;"* (வெளிப்படுத்தல் 22:17).



ஆயினும் தேவனின் முன்னறிவைக் கீழ்க்கண்ட பகுதிகள் காட்டுகின்றன என்பதில் சந்தேகமேயில்லை.

> *"நானே தேவன், வேறொருவரும் இல்லை; நானே தேவன், எனக்குச் சமானமில்லை. அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற் கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வமுதற் கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளை எல்லாம் செய்வேன்"* (ஏசாயா 46:9,1).

> *"கிறிஸ்து பாடுபடவேண்டுமென்று தேவன் தம்முடைய தீர்க்க தரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார்"* (அப்போஸ்தலர் 3:18).

மேலும் கீழ்க்கண்ட பகுதிகள் காண்பிப்பது போல், என்ன நிகழும் என தேவன் அறிவிக்காமல், அதை நிகழப்பண்ணுகிறார்:

> *ஆகையால் என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே; இஸ்ர வேலே கலங்காதே என்று கர்த்தர் சொல்லுகிறார்; இதோ, நான் உன்னைத் தூரத்திலும், உன் சந்ததியைத் தங்கள் சிறையிருப்பின் தேசத்திலும் இராதபடிக்கு இரட்சிப்பேன்; யாக்கோபு திரும்பி வந்து அமர்ந்து சுகித்திருப்பான்; அவனைத் தத்தளிக்கப்பண்ணு கிறவனில்லை"* (எரேமியா 30:10).
> *"உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனையும் முன்குறித்த வைகள் யாவையும் செய்யும்படி, ஏரோதும், பொந்தியு பிலாத்தும் புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடும் நீர் அபிஷேகம் பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய்க் கூட்டம் கூடினார்கள்"* (அப்போஸ்தலர் 4:27,28).

## வேதாகமத்தில் 'முன்குறித்தல்' என்பதற்கு என்ன பொருள்?

சொல்லகராதியில், "நித்தியத்திலிருந்து, தனி நபர்களின் இரட்சிப்பை அறிவித்தல்' என இவ்வார்த்தைக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. இந்த வார்த்தைக்கு பொதுவாக இப்படித் தான் பொருள் கொள்ளப்படுகிறது. மூல மொழியாகிய கிரேக்கத்தில் எழுதப்பட்ட வேதாகமத்தில் இவ் வார்த்தை ஆறு தடவை வருகிறது.

- 'முன்குறித்தல்' (ரோமர் 8:29,30; எபேசியர் 1:5,11).
- 'ஏற்படுத்தினது' (1.கொரிந்தியர் 2:7).
- 'முன்குறித்தவை' (அப்போஸ்தலர் 4:27)).

*மூலவார்த்தை இரண்டு கிரேக்க வார்த்தைகளிலிருந்து பெறப்பட்டது. அவற்றின் அர்த்தங்கள் 'குறித்தல்' அல்லது "தீர்மானித்தல்" மற்றும் "ஏற்கனவே", "முன்னமேயே" நாம் ஏற்கனவே பார்த்தபடி, பூமியைக் குறித்த தமது நோக்கத்தை முக்கியமாக, தமது குமாரனைப் பற்றி முன்னமே தேவன் தீர்மானித்து விட்டார். மேற்குறிப்பிட்ட இரண்டு வேதபகுதிகள் இதற்கு ஒத்தாசையாய் இருக்கின்றன.* அப்போஸ்தலர் 4:24-ல் அவரது குமாரன் சிலுவையில் மரணமடைவதை முன்குறித்து விட்டதாக உள்ளது. 1.கொரிந்தியர் 2:7-ல் "உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன்

நமது மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப் பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம்'' தேவனுடைய ஞானம் மனிதனுக்குப் பைத்தியமாய்த் தோன்றுவதைப் பற்றிப் பேசுகையில் மனிதனின் இரட்சிப்பு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதன் மூலமே என்பது தொடர்ந்து இந்த வசனத்தில் வருகிறது.

### தனி மனிதர்கள் இரட்சிப்பிற்கென்று முன்குறிக்கப் படுகிறார்களா?

ரோமர் **8**-லும், எபேசியர் **1**-லும் தனிநபர்களின் இரட்சிப்புக்கு 'முன்குறிக்கப்படுதல்' பற்றி கூறப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த வேத பகுதிகளைக் கூர்ந்து பார்க்கும்போது, இரட்சிக்கப்படும் எல்லாரையும் குறித்துப் பேசுகிறார் என அறியலாம்.

ரோமர் **8:29,30**-ல் இந்த வார்த்தையை இருமுறை பயன்படுத்துகிறார்.

> *''தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக் கிறார். எவர்களை முன்குறித்தாரோ, அவர்களை அழைத்து மிருக்கிறார். எவர்களை அழைத்தாரோ, அவர்களை நீதிமான் களாக்கியு மிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப் படுத்தியுமிருக்கிறார்''*

தமது குமாரனைப் போன்ற ஒரு கூட்டம் மக்களை வளர்த்தெடுப்பதே தேவனுடைய திட்டம். அவர்கள் அழைக்கப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டு இறுதியில் மகிமைப்படுத்தப்படுகிறார்கள்.

இந்த வார்த்தை எபேசியர் 1:6,12.ல்

> *''தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி (வ.4) தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர் களுமாயிருப்பதற்கு அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே முன்குறித் திருக்கிறார்* (வ.12).

தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப் பட்டு கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப் பட்டோம் எங்களில் ஒவ்வொருவரையும் என்றல்ல 'நாங்கள்' எனப் பவுல் எழுதுவதன் மூலம், தேவனுடைய திட்டம் பவுல் காலத்தின் பரிசுத்த வான்களில் நிறைவேறியதைத் தெளிவுபடுத்துகிறார். தனித்தனி பரிசுத்த வானாகத் தெரிந்து கொள்ளவில்லை.

தேவனின் முன்குறித்த நோக்கத்திற்கும் மனிதனின் சுயவிருப்பத்துக்கு முள்ள வேறுபாட்டை ஒரு எளிய உருவகம் விளக்கும். நாம் ஒரு தொடர்வண்டி நிலையத்தில் நிற்கிறோம். புதுடில்லிக்குச் செல்ல ஒரு தொடர்வண்டி ஆயத்தமாயிருக்கிறது. இது முன்குறித்தல் .அவரவர் வண்டியில் ஏறுவதா, வேண்டாமா என்றும், டில்லி செல்லுமுன் வழியில் வண்டியிலிருந்து இறங்குவதா வேண்டாமா என்றும் தெரிந்து கொள்வ தாகும். இது சுயவிருப்பம்.

### தேவனுடைய அழைப்பு

நித்தியஜீவனைப் பெறுவதற்குத் தனி நபர்கள் முன்குறிக்கப்பட்டிருக் கிறார்கள் என்னும் கருத்தில், தேவன் ஒரு மனிதனின் மனதில் கிரியை செய்து நற்செய்திக்கு





அவனை இணங்கச் செய்கிறார் என்று பொருள். இந்தக் கருத்து வேதவாக்கியங்களுக்கு முரணானதாகத் தோன்றலாம். தேவன் அழைக்கிறார் என்பது உண்மைதான்; ஆனால் தமது வார்த்தையின் மூலம்தான். அதை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் அல்லது இரட்சிக்கப்படுகிறார்கள். *''விசுவாசம் கேள்வியினாலே வரும்'' (ரோமர் 10:17)*

நற்செய்தி பிரசங்கிக்கப் படுவதைக் கேட்கும் நற்பேற்றினைப் பெற்ற தால், மக்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது அதன் பொருளல்ல. நற்செய்தி க்கு இணங்கக் கூடியவர் களுக்கு நற்செய்தி பிரசங் கிக்கப்படும்படி தேவன் ஒழுங்கு செய்கிறார்; அவரால் அது கூடும். இருப்பினும் அவர்கள் தான் விசுவாசத்தோடு அதற்கு இணங்க வேண்டும்; அதன்பின் அவர்கள் நித்தியஜீவனைப் பெறவேண்டும் என்றால், அந்த நற்செய்தியை இறுகப் பற்றி பிடித்துக் கொள்ளவேண்டும்.

### இறுதி சிந்தனை

தேவன் முன்னறிந்திருக்கிறார் எனவும் மனிதனுக்குச் சுயவிருப்பம் இருக்கிறது எனவும் வேதம் போதிக்கிறது. இரண்டும் எப்படி உண்மை யாயிருக்க முடியும் என்பதை மனித மனதால் புரிந்துகொள்ள முடியாது. முடிவாக, நாம் செய்யக்கூடியதெல்லாம் ''இருப்பதை'' அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியது தான்.

*''என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக் கிறது''* (ஏசாயா 55:8,9).

# தேவன் புறஜாதிகளைக் கட்டுப்படுத்துகிறார்

செப்டம்பர் 11.ம் தேதி 2002 அன்று அமெரிக்காவில் நடந்த கோரமான விமான தாக்குதல்களுக்குப் பின்னர் இவ்வித சம்பவங்களை உலகளவில் கட்டுப்படுத்த எவராலும் முடியவில்லை. அது எப்படியோ சம்பவித்து விட்டது என்று எண்ணக்கூடும். அதைப் பின்தொடர்ந்து நடந்து வருகிற வன்முறைக்கு எதிரான கண்டனக் குரல் ஆப்கானிஸ்தானிலும் பிறநாடு களிலும் ''காரணத்தின் விளைவு''களாக செயலில் காணப்படுகிறது. ஆனால் திரு.டேவிட்ரட் ஃபோர்ட் கூறுகிறவிதமாக, எதுவுமே சர்வ வல்லமையுள்ள தேவனுடைய கட்டுப்பாட்டுக்கு வெளியே நடப்பதில்லை.



## தேவனுடைய மேன்மை

தேவன் எல்லா ஜாதிகளையும் ஒன்று விடாமல் எல்லாரையும் கட்டுப் படுத்துகிறார் என்பதற்கு வேதவாக்கியம் தெளிவான விளக்கம் கூறுகிறது. கடந்த காலத்தில் கர்த்தர் செய்ததுபோலவே, நிகழ்காலத்திலும் செய் கிறார். அப்படியே வருங்காலத்திலும் கட்டுப்படுத்துவார். கட்டுப்பாடு இல்லாதது போல காணப்படுகிற இந்த உலகில் இது ஒரு நல்ல செய்தியாக இருக்கும். எவ்வாறாயினும், பூமியின் மேல் குடியிருக்கும் ஒவ்வொரு மனிதனைக் குறித்தும் தேவனுக்குக் கரிசனையும், திட்டமும் உண்டு. இதன் தார்ப்பரியத்தையும் அதிசயத்தையும் நாம் அறிந்து கொள்வது மிக அவசியமாகும்.

முதலாவதாக, நாம் கர்த்தருடைய பார்வையில் எவ்வாறு கருதப்படுகி றோம் என்பதை அறியவேண்டும். அவர் ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக கூறியுள்ளார்:

*"இதோ ஜாதிகள் ஏற்றச்சாலில் தொங்கும் துளி போலவும், தராசிலே படியும் தூசிபோலவும் எண்ணப்படுகிறார்கள்; இதோ, தீவுகளை ஒரு அணுவைப் போல் தூக்குகிறார்"* (ஏசாய| 40:15).

இதில் நாம் கவனிக்கவேண்டிய உண்மை என்னவெனில், ஏற்றசாலில் தொங்கும் நீர்த்துளிகளாக இருப்பது, தனிநபரான நாம் அல்ல, தேசத்து குடிகளாகிய ஜாதிகளே சர்வவல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக அப்படி காணப்படுகிறார்கள். இந்த எண்ணமானது, நம்மைச் சிருஷ்டித்து பராமரிக்கும் தேவனுடைய மேன்மையைக் குறித்துப் போற்றும்படி நம்மைத் தூண்டுகிறது.

ஆனால் இதுவே முடிவான தோற்றமுமல்ல. ஆனால் தேவன் சர்வ வல்லவராகவும், மனிதன் தன்னால் ஒன்றுமே செய்யமுடியாமல் இருக்கும் கட்டத்தில், நாம் எதைச் சாதிக்கமுடியும்? இதில் நல்ல செய்தி என்னவென்றால், தேவன் ஜாதிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தமது ஜனங்களுக்காக வைத்திருக்கும் திட்டத்தை நிறைவேற்றுகிறார்.



## தேவனுடைய நோக்கம்

ஒரு தடவை, மனிதகுலம் தங்களது கீழ்ப்படியாமையாலும் அடாங்காப்பி டாரி தனத்தாலும் பாபேல் கோபுரத்தைக் கட்த ஆரம்பித்த னர் என்று ஆதியாகமத்தில் வாசிக்கிறோம். அது வானத்தை எட்டும் முயற்சியில் கட்டப்பட்டது. ஒருவேளை அதற்குக் காரணம், உலகளவில் திரும்பவும் வெள்ளம் வந்தால் அதற்குத் தப்பலாமே என்ற எண்ணமாக இருந்திருக்கலாம். மற்றபடி, தங்களுக்கென்று ஒரு பெரிய கட்டிடம் கட்டி தங்களுக்கு பெயர் பெற்றுத்தரும் ஒரு சாதனையாக அதைக் கட்டி யிருக்கலாம். (ஆதியாகமம் 11:4). எந்தக் காரணமாயினும், தேவனுடைய பிரதிபலிப்பு இவ்வாறாக இருந்தது:

*"நாம் இறங்கிப் போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார். அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப் போகப் பண்ணினார்; அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டு விட்டார்கள்"* (ஆதியாகமம் 11:7,8).

கர்த்தரால் எவ்வித திட்டத்தையும், ஆலோசனையையும் அது எத்தனை நபர்களாலும் ஜனங்களாலும் பிணைக்கப்பட்டிருந்தாலும், உடைக்க முடியும். அவரால் கூடாதது ஒன்றுமில்லை. அவருடைய சித்தத்துக்கு எதிராக எதுவும் ஜெயம் பெறாது. அந்த சந்தர்ப்பத்தில், கீழ்ப்படியாமலும் தேவ பயமில்லாமலும் மனிதர் எடுத்துக் கொண்ட முயற்சியை வளர விடுவது தேவனுடைய திட்டத்தில் இருக்கவில்லை. அது இன்றும் மாறாமல் இருக்கிறது.

## இஸ்ரவேலரை மையமாகக் கொண்டது

உபாகமத்தின் மூலமாக நம்மிடம் அழுத்தந்திருத்தமாகக் கொண்டு வரப்படுகிற உண்மை என்னவெனில், எல்லா ஜாதிகளின் நடுவில் ஒரு குறிப்பிட்ட ஜாதியான இஸ்ரவேலரை மையமாகக் கொண்டு தேவன் தீர்மானங்களை நிறைவேற்றினார். அந்நாட்களில், மோசேயின் மூலம் வந்த தெய்வீக திருவாக்கு கூறியது:

*"உன்னதமானவர் ஜாதிகளுக்கு சுதந்தரத்தைப் பங்கிட்டு, ஆதாமின் புத்திரரை வெவ்வேறாக பிரித்த காலத்தில், இஸ்ரவேல் புத்திரருடைய தொகைக்குத் தக்கதாய், சர்வ ஜனங்களின் எல்லைகளைத் திட்டம் பண்ணினார். கர்த்தருடைய ஜனமே அவர் பங்கு; யாக்கோபு அவரின் சுதந்திர வீதம்"* (உபாகமம் 32:29).

அந்த வசனத்தின் அர்த்தத்தை ஆராய்ந்து பாருங்கள். ஜாதிகளின் எண்ணிக்கையையும் இருப்பிடமும் தேவனுடைய கரங்களால் நிர்ணயிக்

கப்பட்டு, அவைகளின் நடுவே அவருடைய ஜனத்தை மையப்படுத்தி, தேவன் அவர்களை முதன்மையாக்கினார். அவர்களுடைய உன்னத ஸ்தானம் குறித்து சங்கீத புஸ்தகத்தில் தேவன் கூறியுள்ளதைக் கவனியுங்கள்:

*"யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும், இஸ்ரவேலுக்குத் தமது பிரமாணங்களையும் அறிவிக்கிறார். அவர் வேறே எந்த ஜாதிக்கும் இப்படிச் செய்ததில்லை; அவருடைய நியாயங்களை அறியாமற் போகி றார்கள்"* (சங்கீதம் 147:19,20).

இஸ்ரவேல் தேவனுடைய திட்டத்தில் இருந்தனர், இன்னும் இருக்கிறார் கள். இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வந்தது. தேவன் தமது ஜனத்தை தள்ளிவிடவில்லை. அதை இன்றுவரை புதியஏற்பாடு ஊர்ஜிதப்படுத்து கிறது.

## எதிர்காலம் தேவனுடைய கரங்களில்

வேதாகமத்தின் இறுதி புஸ்தகத்தில் எழுதியுள்ளதைப் படியுங்கள். வெளிப்படுத்தல் 21:24 கூறுகிறபடி, *"இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதன் வெளிச்சத்திலே நடப்பார்கள். அதாவது, தேவனுடைய மகிமையின் வெளிச்சத்தில் (வசனம் 23) நடப்பார்கள்.* இது நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அருளிய தீர்க்கதரிசனமேயன்றி வேறொன்றுமில்லை. அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, இஸ்ரவேலரைத் தவிர பிற ஜாதிகளையும் குறித்த தேவனுடைய திட்டம் குறித்துப் பேசுகிறது. எனினும் இஸ்ரவேலரைப் பொறுத்தமட்டில் தேவனுடைய எதிர்கால திட்டம் நிரந்தரமாக இருக்கிறது என்பதை நாம் காண்கிறோம்.

பழைய ஏற்பாட்டில் தேவனுடைய நோக்கம் முழு உலகத்துக்கென்றும் கொடுக்கப்பட்டுள்ளதை ஒரு பிரகடனமாகக் காண்கிறோம்:

*"பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய (கர்த்தருடைய) ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்"* (எண்ணாகமம் 14:21)

எனவே எல்லா ஜாதிகளும் தேவனுடைய கட்டுப்பாட்டில் உள்ளனர். உலகமும் ஒரு அருமையான எதிர்காலத்துக்காக நியமிக்கப்பட்டுள்ளது. எனினும் பூமியின் ஜாதிகள் எல்லோரும் இன்னும் இரட்சிக்கப் படாமலும், பூமிமுழுவதும் தேவமகிமையால் இன்னும் நிறைவு படாமலும் இருப்பதைத் தெளிவாக காணமுடிகிறது. இவைகள் நிறை வேற வேண்டியது தேவனுடைய நியமனமாக இருக்கிறபடியால், நமது எதிர்காலத்துக்கு நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது. அது உண்மையாக வும், நியாயமாகவும் நிலைத்திருக்கப் போகும் ஒரு நம்பிக்கை ஆகும்.

## கணக்கொப்புவிக்க அழைப்பு

ஏதென்ஸ் பட்டணத்தில் பிரசங்கித்த பவுல் கூறினான்:



*"மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் (தேவன்) ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்"* (அப்போஸ்தலர் 17:26).

நீ எந்த தேசத்தில் பிறந்திருந்தாலும், அந்த நாளுக்காக ஆவலோடு கண்ணோக்கி காத்திருக்கிறாயா? அல்லது அந்த நாள் விடிந்து, தேவனு டைய ஆட்சி மீண்டும் பூமியில் வரும்போது, அதற்கு ஆயத்தமில்லாத அளவுக்கு உன் சொந்த இஷ்டத்தில் நடந்து அமிழ்ந்து போயிருக் கிறாயா?

தானியேல் தீர்க்கதரிசியின் வார்த்தைகள், தேவன் ஜாதிகளிடம் கடந்த காலத்திலும் இப்போது வருங்காலத்திலும் நிறைவேற்றிவருகிற திட்டம் குறித்து விவரமாகக் கூறுகிறது. உதாரணமாக, தானியேல் 7:14, 18,22, 27 வசனங்களைப் பாருங்கள். அது நடந்தேறி வருகிற "சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி" குறித்த பொருளைத் தொடர்ச்சியாகப் பேசுகி றான். அதன் மூலம், ஆதிமுதல் நியமிக்கப்பட்ட ஒருவரான நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனுஷனுடைய ராஜ்யத்தைக் கைப்பற்றி தாம் அதை ஆளுவார் என்று தெளிவாக எழுதப்பட்டுள்ளது. அவருடன் அரசாட்சி செய்யப்போகிறவர்கள் யாரெனில், "அவருடைய பரிசுத்தவான் கள்".

## நம்மைக் குறித்து என்ன?

நமக்குள்ள பெரிய நம்பிக்கை என்னவென்றால், தேவன் ஜாதிகளைக் கட்டுப்படுத்தி, உலக சம்பவங்களைக் கண்காணித்து, இவ்விதமாகத் தமது நோக்கத்தை முடிவில் நிறைவேற்றியே தீருவார். இதில் நாம் பங்கெடுத்தாக வேண்டும். நாம் "தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேல்" ஆவது எப்படி? நாம் எவ்வாறு "பரிசுத்தவான்கள்" ஆகமுடியும்?> அப்போஸ்தல÷ 15:14 நமக்குக் கூறுகிறது:

*"தேவன் புறஜாதியினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்கு கடாட்சித்தருளினார்"* (அப்போஸ்தலர் 15:14).

தேவன் ஜாதிகளின் நடுவிலிருந்து தமது நாமத்துக்கென்று ஜனத்தைத் தெரிந்தெடுக்கிறார் என்று அப்போஸ்தலர் பேசினார்கள். "பரிசுத்தவான்" என்ற வார்த்தைக்கு, 'சுத்திகரிக்கப்பட்டவன்' அல்லது 'பிரித்தெடுக்கப் பட்டவன்' என்று அர்த்தம். இப்படிப்பட்டவர்கள் ஜாதிகளிடமிருந்து தேவனுக்கென்று ஒரு ஜனமாக சேர்க்கப்பட்டார்கள். ஆதலால், இந்த உலக சம்பிரதாயங்களின் நடுவில் குடியிருக்கையிலேயே நாம் தேவனுக் கென்று பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழமுடியும்.

## அதற்கான வழிமுறைகள்:

- தனியாக தினமும் வேதத்தை வாசி.
- வேத வாக்கியத்தை முழுவதுமாக நம்பு.

- ஞானஸ்நான,ம் பெறு.
- அதற்குப் பின் உண்மையான **கீழ்ப்படிதலோடே வாழு.**

## வரப்போகும் தேவனுடைய ராஜ்யம்

பழைய ஏற்பாட்டு காலத்தில் வாக்குத்தத்தங்களை அளித்தார். அவைக ளைப் பிற்காலத்தில், மகாமேன்மையும் அருமையுமானவைகள் (2.பேதுரு 1:4) என்று விளக்கினர். அவைகள் நமது நம்பிக்கைக்கு ஆதாரமான வைகள். நாம் இயேசுகிறிஸ்து பூமிக்கு வருவதை எதிர்பார்த்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இங்கு தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என உறுதியாக இருக்கவேண்டும். நமது சவால் என்னவென்றால், இயேசுகிறிஸ்து பூமியில் ஜாதிகளின் நடுவில் வருங்காலத்தில் அரசாளும் படி வரும்போது நாமும் அங்கு இருப்போம் என்று உறுதியாக விசுவாசித்து காத்திருப்பது தான்.

அந்த நாட்களில் சங்கீதக்காரனின் தீர்க்கதரிசனம் உண்மையாகும்:

*“பூமியிலுள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள். பூமியின் ராஜாக்களே, சகல ஜனங்களே, ... அவர் தம்முடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும், தம்மைச் சேர்ந்த ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கும் கொண்டாட்ட மாக, தம்முடைய ஜனத்திற்கு ஒரு கொம்பை உயர்த்தினார்” (சங்கதம்* 148:7-14).

-டேவிட் ரெட்ஃபோர்ட்

# மாற்று வழியில் கருதுதல் (தியானம்)



“முதுமை அடைவதற்கு பதில் அல்லது மாற்று யாது என பார்ப்போமா யின், முதுமை அடைவதே பரவாயில்லை.” எனக் கூறியவர் மாரிஸ் செவெலியே. அவர் முதுமையடைவதற்கு மாற்றாக அமைந்த மரணம டைந்தார். அப்படி மரித்தது விருப்பப்பட்டு அல்ல. மரணம் தான் எல்லா மனிதருக்கும் ஏற்ற காலத்தில் நடக்கவேண்டிய ஒன்று என்பதால் தான்.

அநேக காரியங்கள் அவற்றின் மாற்றுகளை விட சுலபமானவையாக இருக்கின்றன. நாம் உண்ணும் உணவு எப்போதுமே நமக்கு விருப்ப மில்லாமல் இருக்கலாம். ஆனால் பட்டினி கிடப்பதைவிட அது மேலானது. நாம் ஓட்டுகிற பழைய கார் நமக்கு பிடிக்காமலிருக்கலாம். ஆனால் நடப்பதைக் காட்டிலும் பழைய காரை ஓட்டுவது எவ்வளவோ நல்லது. நாம் குடியிருக்கும் வீடு விரும்பத்தக்கதாக இருக்க இன்னும் ஏதோ தேவைபடுகிறது என நாம் நினைக்க லாம். ஆனால் ஒரு கூடாரத்தில் வாழ்வதை விட இந்த வீடு பரவா யில்லை.



அநேக காரியங்களைக் குறித்து நாம் குறை கூறலாம். ஆனால் சற்றேநிதானித்து மாற் றுகளை கவனித்தால், நமக்கு என்ன இருக்கி றதோ, அதைக்குறித்து நாம் நன்றியுடையவர்க ளாய் இருக்கவேண்டும் .பொருள்கள் நமக்கு மகிழ்ச்சியை கொண்டு வருவதில்லை. மகிழ்ச்சி என்பது ஒரு மனநிலை தான். கொஞ்சத்தை வைத்துக்கொண்டே நாம் மகிழ்ச்சியாக இருக்கக்கூடும். உலகிலுள்ள எல்லா வசதிகளையும், செல்வத்தையும் பெற்றிருந்தாலும் நாம் பரிதாபமானவர்களாகவும் இருக்கக் கூடும்.

தேவனுடைய ராஜரீகம் குடும்பத்தின் அங்கத்தினர்களாக பூமியில் மிக மகிழ்ச்சியான மக்களாக நாம் இருக்கவேண்டும். நம்மிடம் என்னென்ன உள்ளன என சற்றே சிந்தித்துப் பாருங்கள். நம் ஒவ்வொரு தேவை யையும் அறிந்து அதை நிரப்புகிற பரம பிதாவாகிய தேவன் நமக்கிருக்கி றார். நாம் என்றென்றும் ஜீவிக்கும்படி நமக்காக மரித்த நம் மூத்த சகோதரனாகிய இயேசுகிறிஸ்து நமக்கிருக்கிறார். வயதாகிக் கொண்டே போவது மோசமானதல்ல. ஏனெனில், நாம் நேசிக்கும் கர்த்தருக்கு ஊழியஞ்செய்வதற்கு அந்த அளவிற்கு அதிகமான தகுதிகள் நமக்கு உள்ளன. மரணம் என்றால் நமக்கு பயமில்லை. ஏனெனில் *“கர்த்தரு டைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது” “ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாய் இருக்கிறோம்” “நான் உயிரோடிருக்குமட்டும் என் கர்த்தரைப் பாடுவேன்”* என தாவீது பாடினான்.

பனாமா போன்ற இடங்களில் ஒரு சிறிய அறையில் மோசமான உடல் நிலையில் வாழக்கூடிய மகிழ்ச்சியான சகோதர சகோதரிகள் உள்ளனர். அதே சமயத்தில் அமெரிக்கா மற்றும் கனடாவில், விலை உயர் இன்பப் பொருட்களின் மடியில் வாழும் பரிதாபத்திற்குரிய சகோதர சகோதரி களும் இருக்கிறார்கள். ஏன்? அவர்கள் வேறுவிதமாய் சிந்திக்கிறார்கள். பரிதாப நிலையிலுள்ள சகோதர சகோதரிகள், நாம் கூறுவதன் பொருள் யாதெனில் அவர்களே தங்கள் வாயால் தங்கள் பரிதாப நிலையில் இருப்பதாக கூறிக் கொள்கிறார்கள். சொல்லப்போனால் சிலர் பரிதாப நிலையில் இருப்பதையே சந்தோஷமாய் அனுபவிக்கிறார்கள். அவர்க ளுக்கு தேவபக்திக்கு அடுத்தது பரிதாபமாய் வாழ்வது.

பவுல், தான் கிறிஸ்துவைப் பின்பற்றியது போல நாமும் அவரைப் பின்பற்ற வேண்டுமெனக் கூறினார், *“நான் எந்த நிலைமையில் இருந்தா லும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்,”* என்று அறிவித்தார். *அவர் தீமோத்தேயுவிடம் “போதுமென்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை. உண்ணவும், உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்” என்று கூறினார்.*

களிகூருகிறதற்கான காரியங்களை இவ்வளவு அதிகமாய் மக்கள் இவ்வுலகில் இல்லை. நாம் சற்றே நிதானித்து, நம் ஆசீர்வாதங்களை எண்ணிப் பார்ப்போம். மாற்றுகளை எண்ணிப் பாருங்கள். இஸ்ரவே லுடைய காணியாட்சிக்கும் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியராயும் நாம் இருந்தால் எப்படி இருக்கும்? நாம் கிறிஸ்து இல்லாதவர்களாயும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களாயும் இருந்தால் எப்படி இருக்கும்? நம்பிக்கையற்ற யாரோடாவது நாம் உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பதை மாற்றிக் கொள்வோமா? ஒருவனின் உடைமைகள் எவ்வளவு அதிகமாயிருந்தாலும், அவன் தேவனற்ற வனாயிருப்பின் அவன் உண்மையிலேயே பரிதாப நிலையில் இருப்பவன் தான். நாம் பெற விரும்பியும் நம்மிடம் இல்லாத பல பொருள் உடமைகளை மற்றவர்கள் பெற்றிருக்கலாம். ஆனால் திட்டமாக அவர்க ளிடமுள்ள எந்த ஒரு பொருளுக்காகவும், நம்மிடமுள்ள நம்பிக்கையை விற்க மாட்டோம். இயேசுவுக்கு தலைசாய்க்கக் கூட இடமில்லா திருந்தது. ஆயினும் சீக்கிரத்தில் உலகின் ராஜாவாகப் போகிறார். மாற்றுகளை நாம் கவனமாய் ஆராய்வோமெனில், உண்மையுள்ளவர் களாய் இருந்தால், சீக்கிரத்தில் நாம் ராஜாக்களும், ஆசாரியர்களுமாக அவரோடு பூமியில் அரசாளுவோம் எனும் நம்பிக்கையில் களிகூருவோம்.

# எரேமியாவிடமிருந்து இன்று நாம் பெறும் அறிவுரைகள்



நாம் தினசரி வேதாகமம் வாசிக்கும்போது, நாம் விருப்பத்துடன் படிக்கும் வரலாறுகளல்லது விசேஷித்த வகையில் நாம் விரும்பும் வேதத்தில் காணும் ஒரு நபர் - ஆகியவைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கிறோம். நீண்ட காலமாக தீர்க்கதரிசனம் உரைத்த எரேமியா எனக்குப் பிடித்தமானவர். அவருடைய செய்தி காலங்காலமாக மக்களைச் சென்றடைந்தது மட்டுமல்லாமல் இன்றும் ஏற்ற செய்தியாகவே இருக்கிறது.

## அழிவை முன்னுரைத்த தீர்க்கதரிசி எரேமியா

பாவத்திலும் அக்க்கிரமத்திலும் மூழ்கிக் கிடந்த மக்களுக்கு பரிகாரமே இல்லை என்னுமளவிற்கு யூதா தேசம் இருந்த கடைசி நாட்களில் தீர்க்க தரிசனம் உரைத்ததால், எரேமியா



அழிவை முன்னுரைத்த தீர்க்கதரிசி என அறியப்பட்டிருந்தார். 'அழும் தீர்க்கதரிசி' என்றும் எரேமியாவுக்குப் பெயர் உண்டு. ஏனென்றால் அவர் அளித்த செய்தியினிமித்தம் அவர் அநுபவித்த சொல்லொணா துன்பத்தி னால் அவர் ஆத்துமாவை உள்ளார்ந்த வேதனை கசக்கிப் பிழிந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக தனிமனிதனின் பொறுப்பு பற்றிக் கூறிய தீர்க்கதரிசி ஆவார். மக்கள் எதை விதைத்தார்களோ அதையே அறுப்பர் என்று அவர் அறிவித்தார் - தனிமனித பொறுப்பைத் தட்டிக்கழித்து, பல்வேறு சூழ்நிலைக் காரியங்களைக் காரணங்காட்டும் இன்றைய உலகுக்குத் தகுதியான செய்தி தான்.

**தீர்க்கதரிசனத்தின் வரை (சட்டம்)**

எரேமியாவைப் பற்றிச் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டிருப்பது நமக்குப் பயன்படும்.

i. அதிகாரங்கள் 1-20 ஆரம்பகால தீர்க்கதரிசனங்கள் யோசியா ஆண்ட காலத்தின் பிற்பகுதியிலிருந்து யோயாக்கீமின் 4-வது ஆண்டு வரை.

ii. 21-38 யோவாகாஸ், யோயாக்கீம், யோயாக்கீன் மற்றும் சிதேக்கியா ஆகியோர் ஆண்ட காலங்களில் கூறிய தீர்க்கதரிசனங்கள்.

iii. 39-45 எருசலேமின் வீழ்ச்சியும் அதன்பின் நடந்த விரும்பத்தகாத நிகழ்வுகளும்

iv. 46-52. தேசங்களுக்கு விரோதமாய் நியாயத் தீர்ப்புகள்.

## எரேமியா என்பவர் யார்?

தேவன் அநேக ஆண் பெண்கள் மூலமாய்ப் பேசியிருக்கிறார் என நாம் அறியோம் - பிரபுக்கள், மேய்ப்பர்கள், ஏன் பரிசேயர்களில் ஒரு பரிசேயன் எனப் பரவலான பின்னணியிலிருந்து வந்த மக்கள் அவர்கள். எரேமியா பெற்ற பயிற்சியைப் பார்க்கும் போது, அவர் அதிகத் தகுதி பெற்றவர் எனலாம். அவர் ஒரு ஆசாரியர் (1:1) சொல்லப் போனால் பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவின் மகன் (2.ராஜாக்கள் 22:4). இதனால் மதம் மற்றும் அரசியல் சார்ந்த அதிகார வர்க்கத்தினர் மத்தியில் நன்கு அறிமுகமானவராகவும் முக்கியமானவர்களோடு தொடர்புடையவராகவும் எரேமியா இருந்திருப்பார்.



எரேமியா கொடுக்கப்போகும் செய்தி எந்த அளவுக்கு முக்கியமானதும் முடிவானதுமென்றால், இப்பணிக்கென அவர் விசேஷித்தவராய்த் தெரிந் தெடுக்கப்பட்டார். *"நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்" (1:5).*

முதலில் எரேமியா தயங்கினார்; *"ஆ கர்த்தராகிய ஆண்டவரே இதோ நான் பேச அறியேன்; சிறு பிள்ளையாயிருகிறேன்"* (1:6) என்றார். ஆனால் தேவன் பாதுகாப்பை (1:8) வாக்குப்பண்ணினதோடு தம் வார்த்தைகளைப் பேசும் வரத்தையும் (1:9) வாக்களித்தார்.

கலககுணத்தாலும் விக்கிரகாராதனையினாலும், நலிவுற்று ,பரிகாரமின்றி அழிவின் இறுதிக் கட்டத்திலிருக்கும் தேசத்திற்கு நாற்பத்தி ஒன்றரை ஆண்டு காலமாய் தீர்க்கதரிசனம் உரைத்த இந்த துக்கம் நிறைந்த மனிதன் மேல் யார் பொறாமை கொள்வார்?

## எரேமியாவின் செய்தி யாது?

மனஸ்தாபப்படுதல் மற்றும் மனம் மாறுதல் ஆகிய நிலைகளுக்கு அப்பால் போய்விட்ட ஒரு தேசத்தின் அழிவைக் குறிக்கும் ஆக்கினைத் தீர்ப்பைக் கீழ்க்கண்ட வரைசட்டம் காட்டுகிறது:

**1** .இஸ்ரவேல் மேலிருந்து கீழ்வரை **தேவனையும் அவர் வார்த்தையையும் மறந்து, அவரை விட்டுவிட்டார்கள்.**

**2** அவர்கள் **விக்கிரகராதனைக்காரர்கள்**. தங்கள் சொந்தக் கைகளால் உண்டுபண்ணின விக்கிரகங்களுக்குத் தங்கள் பிள்ளைகளை நெருப்பில் பலியிட்டார்கள்..



**3** உண்மையற்ற, ஒழுக்கங்கெட்ட மனைவிகளையும், காட்டுக் கழுதைகளையும் போல், அவர்கள் நன்றிகெட்டவர்கள், **முற்றிலும் கலக்காரர்கள்.**

**4** அவர்கள் ஒழுங்குக்குள்ளும் திருத்தலுக்குள்ளும் வரமுடியாதவர் கள். **பிடிவாதமும் பெருமையும்** உள்ளவர்கள். அவர்கள் தவறே செய்யவில்லை என நினைத்துக் கொள்ளுவார்கள்.

**5** அவர்கள் மனந்திரும்புதல் **போலியானது, அரைமனதுடனானது**. தங்களை இன்னும் குருடாக்கிக் கொள்கிறார்கள்.

**6** தங்கள் சொந்த லாபத்திற்காக பெலவீனர்கள் மேல் ஆதீக்கம் செலுத்தும் **கொடுமையானவர்கள்; ஊழலைச் செயற்படுத்து பவர்கள்.**

**7** **பொல்லாப்புச் செய்யப் புதிதும்மேலும் மோசமானதுமான வழிகளைத்** தேடி அலைந்தார்கள்.

**8** தீர்க்கதரிசிகள் **பொய்கள்** கூறினார்கள்; ஆசாரியர்களுக்கு **அறிவில்லாமற்** போயிற்று; ஏழைகளும் திக்கற்றவர்களும் துன்புறும்போது, அவர்களை ஆளுகிறவர்கள் **லஞ்சம் பெற்றார் கள்.**

**9** அவர்கள் **கொலைக்காரர்கள், விபசாரக்காரர்கள், திருடர்கள், பொய்யர்கள்** மற்றும் **பிறரை ஒடுக்குகிறவர்கள்.**

**10** கர்த்தரால் அவர்களுக்குப் பயனில்லை என்ற நிலைக்கு வந்துவிட் டார்கள். **திருத்துதல்களைக் கேட்கப் பிரியமில்லை.** ஏனென்றால் அவர்கள் வணங்காக் கழுத்தும், இருதயக் கடினமும் உள்ள வர்கள். வெட்கம் அறியாதவர்கள்.

**11** அவர்கள் **பாவம் செய்து இளைத்துப் போனார்கள். தீமை செய்யவும் வலையில் அகப்பட்டார்கள்.** நன்மை செய்யமாட்டாத வர்களானார்கள்.

**12** ஆகவே அவர்களுக்கு நம் பிக்கையே இனி இல்லை. அவர்களுக்கு இருக்கும் ஒரே வழி தண்டனையை ஏற்றுக் கொள்வது தான். காலம் முடிவுற்றது. உடன் படிக்கையின் சாபங்கள் அவிழ்த்து விடப்படும்.

**13** வடக்கேயிருந்து படை யெடுத்து வரும் ஒரு ராணுவம் அவர்கள் தேசத் தை முற்றிலும் அழித்து அவர்களைச் சிறைப்பிடித் துக் கொண்டு போகும்.

**14** அதை எதிர்ப்பதற்கு பதில் தாங்கள் அரசியல் சுதந்தி ரத்தை ஒரு தேசமாக ஒப்படைக்க வேண்டியதா யிற்று. முன்பின் அறியாத நாட்டிற்கு யுத்தத்தின் கொள்ளையாக நாடுகடத்தப்பட்டார்கள்.

**15** அந்த இராணுவத்தை எதிர்த்தவர்கள், முற்றிகையிலே பட்டினி யால் அல்லது நோயினால் மடிவார்கள். அல்லது பட்டயத்தால் கொல்லப்படுவார்கள்.

## எரேமியாவுக்குக் கிடைத்த பிரதிபலன்.

எரேமியாவின் செய்தியை நாடெங்கிலும் யாரும் விரும்பவில்லை. கொப்பளிக்கும் பகையோடு - அதிலும் விசேஷமாக யோசியாவின் மரண த்திற்குப் பின் மக்களின் எதிர்ப்பு அதிகமாகியது. ‘ நாட்டுக்கு உண்மை யில்லாதவன், மற்றும் தேச துரோகி எனத் தங்கள் சுதந்தரத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிற ஒரு தேசத்தினரால் எரேமியா குற்றஞ் சாட்டப்பட்டான். அவன் சொந்த ஊராகிய ஆனதோத்தின் மனிதர்கள் அவனைக் கொல்லப் போவதாகப் பயமுறித்தினர். (11:21) அவன் சொந்தக் குடும்பத்தினரே அவனுக்கு விரோதமானார்கள் (12:5-6)

அவன் வேதனையின் அழுத்தம் அவனைப் புலம்ப வைத்தது.“எல்லாரும் என்னைச் சபிக்கிறார்கள்” (15:10). அவனுடைய சத்துருக்கள் அவனைக் கொல்ல ரகசியமாய் சதிசெய்தார்கள். அவர்களுகு அவன் செய்ய முயன்ற ‘ னன்மைக்குத் தீமை செய்தார்கள் (18:18-23). தினந்தோறும் அவர்கள் அவனைக் கேலிசெய்து பரிகாசம் பண்ணி நிம்மதியில்லாமற் பண்ணி னார்கள் (20:7-8). இந்த வெறுப்பு மற்றும் பகையோடு கூட உடலிலும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தான். ஒரு தடவைக்கும் மேலாக அடிப்பட்டான். இரவு முழுவதும் கால்கள் கட்டப்பட்டிருந்தான். அநேகநாள் இருட்டறையில், சாகும் வரை தனிமைச் சிறையில் வைக்கப் பட்டான். வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு அவன் விருப்பத்திற்கு மாறாக எகிப்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டான். மெய்யாகவே அநேக வழிகளில் மாபெரும் தீர்க்கதரிசியான இயேசு கிறிஸ்துவிற்கு முன்குறித்துக் காட்டு பவனாயிருந்தான். எரேமியாவை ஒரு மனிதனாக நாம் அறிய வும்,அவருடைய வல்லமையான செய்தியை அறியவும் போதுமான செய்தி கள் அவருடைய சொந்த அனுபவங்கள் பற்றி வேதத்தில் காண்கிறோம்.

## எரேமியா எப்படி உயிர் வாழ்ந்தார்?

'வெற்றி கண்ட மக்களின் ஏழு பழக்கங்கள்' என்ற புத்தகம் சமீபத்தில் எனக்குக் கொடுக்கப்பட்டது. எரேமியா துன்பத்தைச் சகிக்கும்படியாக அழைக்கப்பட்டபோது எப்படி உயிர் வாழ்ந்திருப்பார் என்று அந்த புத்தகம் என்னைச் சிந்திக்க வைத்தது. அப்படி நான் ஆராய்ந்ததில் சோதனைகளைச் ச்கிக்க எரேமியாஅவுக்கு ஆற்றலைக் கொடுத்தது ஏழு பழக்கங்கள் எனக் கண்டேன்.

1. **மெய்யான தேவனின்** படைக்கும் வல்லமை மற்றும் அவரின் குணாதிசயம்பற்றி எரேமியா **நன்றாக அறிந்திருந்தார்; புகழ்ந்தார்.** (10:12-16; 32:16-20). எரேமியா, தேவன் எங்குமுள்ளவர் என்றும் (23:23-24) சர்வ வல்லவர் என்றும் (32:27, 48:15; 51:57),எல்லா ஜாதிகள் மேலும் ஆளுகை செய்கிறவர் என்றும் கூறுகிறார்.
2. **எதிர்கால மகிமையைப் பற்றித் தீர்க்கதரிசியின் கூர்மையான தரிசனம்** கொண்டிருந்தார். வரப்போகும் நியாயத்தீர்ப்புகள் பற்றிய அவரின் தீர்க்கதரிசனங்கள் எங்கிலும் ஒரு எதிர்கால மீட்பு, உண்மையுள்ள ஜனங்கள் மீந்திருப்பது மற்றும் புது உடன் படிக்கை (31:31-24) பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவற்றோடு மேசியா வின் வருகை மையச் செய்தியாகக் கொடுக்கப்பட்டுள்ளது (23:5-6).
3. இந்த ஞானதிருடிக்காரர் **தேவனுடைய வார்த்தையில்** மூழ்கிப் போனார் - (15:16; 20:9).
4. பொல்லாதவர்களின் உலகப்பிரகாரமான வழிகளிலிருந்து எரேமியா தன்னைப் பிரித்து வைத்துக் கொண்டார். அவர்களின் **பொல்லாத செயல்களை வெறுத்தார்** (15:17).
5. **ஆனால் எரேமியா அவர்களை வெறுக்கவில்லை.** தேவனின் தொடர்ச்சியான பொறுமைக்காகவும் நியாயத்தீர்ப்பு தாமதமாக வேண்டுமெனவும் அவர் பலமுறை மன்றாடினார் (7:16; 10:23-25; 14:7-9; 13:3, 17-22). சொல்லப்போனால், எரேமியா எந்த அளவுக்கு மக்களுக்காக மன்றாடினார் என்றால், தேவன் அவரிடம் அப்படி மன்றாடுவதை நிறுத்தும்படி கூறவேண்டியதாயிருந்தது.
6. அவர் காலத்திலிருந்த உண்மையும் உத்தமுமானவர்களிடம் ஆறுதலையும் உற்சாகத்தையும் தீர்க்கதரிசி பெற்றுக்கொண்டார்..
   a. யோசியா ராஜா 2.நாளாகமம் 35:25.
   b. உரியா (26:20-23). ஆபகூக் மற்றும் ஒபதியா போன்ற மற்ற உண்மையுள்ள தீர்க்கதரிசிகள்.
   c. அகீக்காம் (26:24, 2.ராஜாக்கள் 22:12). அவர் மகன் கெதலியா (39:14) எபத்மெலேக் (38:7-13; 39:15-18) போன்ற நட்பு பாராட்டிய தலைவர்கள்.
   d. உண்மையும்ம் உத்தமுமுள்ளரேகாபியர்கள் அதிகாரம் 35
   e. மாபெரும் காரியங்களை சாதிக்க புறப்பட்ட எசேக்கியேல், தானியேல் போன்ற இளைஞர்கள்.
   f. உண்மையுள்ள எழுத்தன் பாரூக்.
7. எரேமியா **விழுந்ததும் எழுந்துவிட்டான்** (15:15, 18-21). தன் நம்பிக்கையை தேவனில் வைத்தான் (17:16-17).

## நமக்கு எரேமியா தரும் பாடங்கள்

நாமும் ஒரு காலகட்டத்தின் முடிவில் தான் வாழ்கிறோம். மனந் திரும்பாத பூமிமீது தம் நியாயத்தீர்ப்புகளை மறுபடியும் அவிழ்த்து விட தேவன் ஆயத்தமாயுள்ளார். விழுந்தவர் மீண்டெழுந்து நிற்பது கடினம் தான். ஆனால் எரேமியா நமக்கு வழிகாட்டுகிறார். நாம் தேவனை, அவர் மகத்துவத்தை, அவர் குணசீலத்தை அவர் தயையை நேசிக்கிறோமா? ஒரு நாளைக்கு எத்தனை தடவை சர்வவல்லவரை நினைத்து, ஜெபித்து, அவருடைய ஏராளமான தயைக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறோமா?

கிறிஸ்துவோடுள்ள எதிர்கால மகிமையைக் குறித்த கூர்மையான தரி சனம் நமக்கு உண்டா? நித்தியத்தை நம் ஆண்டவரோடு செலவிடுவது குறித்த யோசனை தடைகளை மேற்கொள்ளவும் சங்கட மான நேரங்க ளில் அவைகளைத் தாங்கிக்கொள்ளவும் உதவுகிறதா?

நாம் பாவத்தை வெறுத்து, பாவியின்மேல் மனதுருக்கம் கொண்டு, அவனுக்கு உதவி செய்கிறோமா? பாவத்தை விட்டு நாம் நம்மைப் பிரித்து நிற்கிறோமா? நாம் தேவனுடைய வார்த்தையில் மூழ்குகிறோமா?

நாம் நடக்கும் பாதையிலே நடக்கும் மற்றவர்களோடு ஐக்கியம் கொள்கிறோமா? வாரத்துக்கு ஒரு முறையாவது வேதாகம வகுப்புக்குச் செல்லுகிறோமா? சபைப் பொறுப்புகளில் ஏதாவது ஒன்றை எற்றுக் கொள்கிறோமா?

நாம் மறுபடியும் எழும்பி, தேவனிலுள்ள நம் விசுவாசத்தைப் புதுப்பித்துக் கொள்ளுகிறோமா? நாள் நமக்கு மோசமாக இருக்கும்போது, ஏதோ ஒரு சின்ன காரியமாவது செய்ய நாம் முயல்கிறோமா? இன்னொருவரிலுள்ள பலவீனத்தையல்ல, பலத்தைப் பார்க்கும் நேர்மையான சுபாவமுள்ள வர்களயிருக்க முயல்கிறோமா?

ஒரு தேசத்துக்குத் தீர்க்கதரிசியாக இருக்க நாம் அழைக்கப்படாமல் இருக்கலாம். ஆனால் இருள் நிறைந்ததோர் உலகில் தீபங்களாயிருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். எரேமியாவின் குறிப்பிடத்தக்க முன்மாதிரி களும், இன்று நாம் நினைவுகூரும் எரேமியாவை விடப் பெரியவரின் பாடு மற்றும் அன்பின் பிரயாசமும், நம்மைத் தூண்டி விடட்டும். இக்கடைசி நாட்களில் நாம் எழும்பி உறுதியாய் நிலைத்திருப்போமாக!

*"அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்"* (மத்தேயு **24:12-13).**

**டேனியேல்ஸ் டைல்ஸ்**